மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 55 குடும்பங்களுக்கு கோட்டூர்புரத்தில் தீ பிடிக்காத வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Visit of World Bank Officials.

* 190 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the officials of the World Bank visited the Projects of Slum Clearance Board in December 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 1972-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் எட்டாம் தேதியன்று உலக வங்கியைச் சேர்ந்த திரு. ஜோஷென்கிராஸ்கே அவர்களும், திரு. பில்செல் எச். அலிஸ்பா அவர்களும் தங்களுடைய சென்னை சுற்றுப் பயணத்தின்பொழுது குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டார்கள். வாரியத்தின் பணியை மிகவும் பாராட்டியுள்ளார்கள். அதற்குரிய சான்றுகளும் அளித்திருக்கிறார்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, சிட்டி பகுதிகளைப் பார்வையிட்டு, சான்றுகள் வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிட்டியில் கட்டப்பட்டிருக்கும் வீடுகளைப் பார்வையிட்டுத்தான் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி மாவட்ட வாரியாக அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் சென்னையில் தான் பணியாற்றுகிறது. வீட்டு வசதி வாரியம் மாவட்ட அளவில் முடிந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் மூலம் குடிசைப் பகுதிகளை மாற்றி வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

Lands for Slum Clearance schemes.

* 191 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the details of lands given free to the Slum Clearance Board;

(b) the extent of land given; and

(c) their value?